கவிதைப்பேழை

இயல் ஒன்று

# அழியாச் செல்வம்




பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பல்வகையான செல்வங்களைச் சேர்த்து வைக்கின்றனர். அவற்றுள் சில செல்வங்கள் களவு போகவோ, அழியவோ கூடும். ஆகையால் பெற்றோர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வங்களுள் சிறந்ததும், அழியாததும் ஆகிய செல்வத்தைப் பற்றி அறிவோம்.

*வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயிற் கேடில்லை;*
*மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்*
*எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன*
*விச்சைமற்று அல்ல பிற.**

*–சமண முனிவர்*

### சொல்லும் பொருளும்

வைப்புழி – செல்வம் சேமித்து வைக்கும் இடம்
கோட்படா – ஒருவரால் கொள்ளப்படாது
வாய்த்து ஈயில் – பெறும்படி கொடுத்தாலும்
விச்சை – கல்வி
வவ்வார் – கவர முடியாது
எச்சம் – செல்வம்

### பாடலின் பொருள்

கல்வியைச் செல்வம் போல வைத்திருப்பினும் அது பிறரால் கொள்ளப்பட முடியாது. ஒருவர் பெறும்படி கொடுத்தாலும் குறைவுபடாது. மிக்க சிறப்பினை உடைய அரசராலும் கவர முடியாது. ஆதலால் ஒருவர் தம் குழந்தைகளுக்குச் சேர்த்து வைக்க வேண்டிய செல்வம் கல்வியே ஆகும். மற்றவை செல்வம் ஆகா.

### நூல் வெளி

நாலடியார் சமண முனிவர்கள் பலரால் எழுதப்பட்ட நூலாகும். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இது நானூறு வெண்பாக்களால் ஆனது. இந்நூலை நாலடி நானூறு என்றும், வேளாண்வேதம் என்றும் அழைப்பர். திருக்குறள் போன்றே அறம், பொருள், இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது. இந்நூல் திருக்குறளுக்கு இணையாக வைத்துப் போற்றப்படுவதை நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் தொடர் மூலம் அறியலாம்.